**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-13**

| | |
|---|---|
| Name | திரு.ஜனார்தனன் |
| Husband/Father Name | ஏழுமலை |
| Village /Area | பழையபாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 08.05.2024 அன்று கோவிந்தாங்கல் ஜங்க்ஷன் டிக்கடையிடம் சண்முகம் என்பவர் சென்ற போது அங்கிருந்த வடிவேலு என்பவரிடம் தனக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.2,000/- கேட்ட போது வடிவேலுக்கும் சண்முகத்துக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் அப்போது வடிவேல் என்பவர் அங்கிருந்த விறகு கட்டையால் சண்முகத்தின் தலை மீது காயம் ஏற்படுத்தியதாகவும் காயம்பட்ட சண்முகத்தை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். 2 நாள் கழித்து சிகிச்சையிலிருந்த சண்முகம் இறந்து விட்டார். அவரை நானும் ஊர்காரர்களும் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் இறந்த நிலையில் இருந்தார். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பிரேத விசாரணை அறிக்கையிலுள்ள 4வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை பற்றி கேள்விபட்டு தான் சாட்சி அளிக்கிறேன்.

நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு இரவு 8 மணிக்கு சென்றேன். நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சண்முகம் இறந்த பிறகு நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை சண்முகம் உயிருடன் இருக்கும் போது தான் சென்று பார்த்தேன்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.23 18:48:37 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.